**செ.வெ. எண்: 432** **நாள்: 11.7.2011**

**<u>மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆவின் மற்றும் பால்வளத்துறை அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டம்</u>**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. என்.ஆர். சிவபதி அவர்கள் தலைமையில் **11.07.2011** அன்று காலை தலைமைச் செயலகத்தில் தமிழகத்தில் பால் கொள்முதலை அதிகரிக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆவின் மற்றும் பால்வளத்துறை அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. பால்வளத்துறை ஆணையர்/ஆவின் நிர்வாக இயக்குநர் திரு விபு நய்யர், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இந்த கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழகத்தை பால் உற்பத்தியில் முன்னிலை மாநிலமாக திகழச்செய்ய ஆவின் மற்றும் பால்வளத்துறை அதிகாரிகள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும், புதிய பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அறிவுறுத்தினார். பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணபட்டுவாடா குறித்த நேரத்தில் செய்யப்பட வேண்டும், நுகர்வோர்களுக்கு பால் விநியோகம் குறித்த நேரத்தில் அளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கடந்த கால ஆட்சியில் ஏற்பட்ட நிதியிழப்பை சரிக்கட்டவும், பால் உற்பத்தியாளர்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு, அவர்களுக்கு நிலுவையில் உள்ள பால்பணம் பட்டுவாடா செய்வதற்கு ஏதுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவின் நிறுவனத்திற்கு ரூ.**49.65** கோடியை கருணையுடன் வழங்கியுள்ளார்கள்.

இதன் காரணமாக பால் உற்பத்தியாளர்களுக்கு தாமதமின்றி பால் பண பட்டுவாடா மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அளிக்கப்பட வேண்டிய நிதி உதவித்தொகையான ரூபாய் **6.29** கோடியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியப் பொது மேலாளர் அவர்களிடம் வழங்கினார்கள்.

பால் உற்பத்தியை விரைவாக பெருக்கும் வகையில் மாவட்ட பால் வளத்துறை துணை பதிவாளர்களுக்கு புதிய பால் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்த தனித்தனியே மாவட்ட வாரியாக இலக்குகளை அமைச்சர் அவர்கள் வகுத்துக்கொடுத்ததுடன் ஒருமாத காலத்திற்குள் அவ்விலக்குகளை எய்தி பால் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

பால்பணத்தை பட்டுவாடா செய்யாமல் தாமதப்படுத்தும் சங்க அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் துணைப்பால் ஆணையர் /ஆவின் இணை நிர்வாக இயக்குநர் (பொறுப்பு) திரு எம். ரவிகுமார், ஆவின் பொது மேலாளர் (பணிக்குழு) திரு. எஸ். முனிரத்தினம், மாவட்ட பால் உற்பத்தியாளகள் கூட்டுறவு ஒன்றிய பொது மேலாளர்கள், துணைபதிவாளர்கள் (பால்வளம்), பால்வளத்துறை மற்றும் ஆவின் அதிகாரிகள் கலந்துகொண்டார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**